REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: புரட்டாசி 11உ வெள்ளி (27—9—57) ★ ☆ வெளியூர்: புரட்டாசி 12உ சனி (28—9—57) [இதழ் 90

சிங்கங்கள் கணக்கெடுப்பு

★

பூனா, செப். 27—

மூன்றாண்டுகளுக்கு முன்னர் சௌராஷ்டிரா பகுதியில் உள்ள கிர் காட்டில் 141 ஆண் சிங்கங்களும், 102 பெண் சிங்கங்களும் இருப்பதாகக் கணக்கிடப்பட்டதாம்.

இப்போது மீண்டும் கணக்கெடுக்க முற்பட்டுள்ளனராம். ஒலி கிளம்பாத துப்பாக்கியில் சாயத் தண்ணீர் ஊற்றி சிங்கத்தைப் பார்த்துச் சுடுகின்றனராம். இதுதான் கணக்கெடுக்கும் முறை.

இந்தி எதிர்ப்பு இயக்கமே விடுதலைத் தாகம் ஊட்டியது

திராவிடத்திற்கு இந்தி இம்மி அளவேனும் பயன்தருமா?

தாய் மொழி நிறைவேற்றித்தராத பணிகளை இந்தியால் தர இயலுமா?

அகில உலகப் பொது மொழியான ஆங்கிலம் இந்தியாவிலும் பொது மொழியாவதில் நஷ்டம் என்ன?

திருவண்ணாமலையில் பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் முழக்கம்

கடந்த 21—9—57-ல், திருவண்ணாமலையில் நடந்த வ. ஆ. மாவட்ட இந்தி எதிர்ப்பு மாநாட்டில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :—

"நாம் இன்று பெற்றிருக்கிற விடுதலை வேட்கை உணர்வு இந்த நாடு தனி நாடாக வேண்டும்; இந்த நாட்டினுடைய உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டும்; இந்த நாட்டினுடைய பண்பாட்டியலும், நாகரிக இயலும், கலை இயலும், அரசியலும் - பொருளாதார இயலும் இந்த நாட்டிற்கு ஏற்றபடி அமைக்கப்பட வேண்டும்; அந்த வகையில் இந்த நாடு தனி நாடாக ஆக வேண்டும்; என்ற அளவுக்கு தி. மு. கழகத்தவராகிய நாம் விடுதலை வேட்கைப் போர் உணர்வு கொண்டிருக்கின்றோம்.

"இந்த விடுதலை வேட்கை உணர்வு கொள்வதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது இந்தி எதிர்ப்பு இயக்கந்தான்; 1937-ம் ஆண்டிலே துவங்கிய அந்த இயக்கந்தான் என்பதை நாமனைவரும் நன்கு உணர்ந்திருக்கிறோம்.

"இன்றைய நிலையில் நாட்டு மக்களிடத்திலே நாம் அரசியல், பொருளாதார, சமுதாயக் கருத்துக்களைப் பரப்பிவருகின்றோம். மொழிவழி பிரிந்து இனவழி ஒன்றுபட்ட ஒரு திராவிடக் கூட்டாட்சி மலரவேண்டும்; இந்தத் திராவிடக் கூட்டாட்சிதான், நமக்கேற்ற தேவைகளை—நாம் விரும்பும் தேவைகளை நிறைவேற்றித் தரவல்லது என்பதை எடுத்து முழங்கி வருகின்றோம். இந்த நிலையிலேதான் இந்தியை நாம் எதிர்த்துத் தீரவேண்டிய நிலையிலே இருந்து வருகின்றோம்.

"இந்தியை எப்படியாவது, வலுக்கட்டாயமாகப் புகுத்தித் தீருவது என்கின்றமுறையிலே இந்திய அரசியலார் முயன்று வருகிறார்கள் என்பதற்கான விளக்கங்களை எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் அழகாக எடுத்துரைத்தார்கள்.

"'இந்தி, இம்மியளவு நம்முடைய வாழ்க்கைக்குத் துணை செய்யக் கூடிய ஒன்று என்றால், அல்ல. திராவிட நாடு தனி நாடாகப் பெறவேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டிருக்கின்ற நமக்கு இந்தி இம்மியளவாவது பயன்படக்கூடிய ஒன்று என்று பார்த்தால், அல்லவே அல்ல. இந்தியத் துணைக்கண்டத்தை வைத்து, இன்றைக்கு அமைந்திருக்கின்ற இந்திய யூனியன் ஆட்சியை வைத்துக்கொண்டு பார்த்தாலும், இந்திய யூனியன் ஆட்சி ஆதிக்கம் இருக்கிறது என்று வைத்துகொண்டு பார்த்தாலும் இம்மியளவாவது நமக்கு இருந்தேதீரவேண்டியஒன்றுஎன்று பார்த்தாலும் அந்த நிலையிலும் இல்லை என்பதற்கான காரண காரிய விளக்கங்களைத்தான் நாம் எடுத்துக் கூறிவருகின்றோம்.

"தமிழ் இன்றைக்கிருக்கின்ற நிலைமையையும், இந்தி வந்தால் எப்படித் தமிழும், தமிழர்களுடைய உரிமைகளும், தமிழர்களுடைய நாகரீக இயலும் பண்பாட்டியலும், பாதிக்கப்படக் கூடியனவாக அமையும் என்பதற்கான காரண காரிய விளக்கங்களைப் பல ஏடுகளின் மூலமாகவும் கூட்டங்களின் வாயிலாகவும் மாநாடுகளின் மூலமாகவும், தீர்மானங்களின் மூலமாகவும் சென்ற பல ஆண்டுகளாகவே நாம் வற்புறுத்தி வருகிறோம். மாநில மாநாட்டில் நாம் இதுபற்றிய தீர்மானங்களை நிறைவேற்றி, இந்திய அரசியலாளருக்கும் சென்னை அரசியலாருக்கும் தெரிவித்திருக்கின்றோம். நாட்டு மக்களுக்கும் இதற்கான விளக்கங்களை எடுத்துக் கூறிவருகின்றோம். மொழி, வாழ்க்கைக்கு எவ்வளவு இன்றியமையாதது என்பதை நாமனைவரும்உணர்ந்திருக்கின்றோம். நம்முடைய அன்றாட வாழ்க்கைகளை நடத்த தமிழகத்தைப் பொறுத்தவரையில் தாய்மொழி தமிழ், இந்த நிலப் பகுதிக்குரிய மொழி தமிழ் இருக்கிறது. எனவே, நம்முடைய அடிப்படை அறிவைப்பெற, சூழ்நிலை அறிவைப்பெற, வாழ்க்கையை நடத்த, வாணிகம்புரிய, இந்த நாட்டினுடைய நிலைமைகளைக் கண்டறிய, ஆட்சி புரிய, சட்டமன்றங்களை நடத்த, பாடத்திட்டம் நடத்த, நாடமொழி கற்க, கல்வி பயிலப் பள்ளிகளிலே பயில பல்கலைக் கழகங்களில் பயில அரசியலை—கர்ணத்திலிருந்து கவர்னர்வரை—நடத்த தாய்மொழி தமிழ் போதும்.

"இந்த அகில உலகத்தோடு தொடர்புகொள்ள, அகில உலக வாணிபம் செய்ய, அகில உலகத்திலே வளருகின்ற விஞ்ஞானத்தை அறிய தாய்மொழியான தமிழ் போதுமான ஒரு மொழியாக அமைந்திருக்கிறதா என்றால் இன்றைய நிலையில் இல்லை. எனவே, தமிழ் ஒன்றை மட்டுமே வைத்துக்கொண்டு நாம் வாழ்ந்து விடக்கூடிய நிலையிலிருக்கிறோமா என்றால் இல்லை. எனவே, தமிழ் நிறைவேற்றித்தராத பண்புகளை நிறைவேற்றித் தருவதற்கு ஒரு மொழி தேவை. இன்றைய நிலையில் அகில உலகத் தொடர்பு கொள்ளவும், அகில உலகத்திலே ஏற்படுகின்ற விஞ்ஞானக் கருத்துக்களைப் பெறவும் ஒருவரோடு ஒருவர் கருத்துக்களைப் பரிமாறவும், உறவுகொண்டு வாழவும், அதற்குத் தமிழ் நிறைவேற்றித் தராத பண்புகளை நிறைவேற்றித் தருவதற்கு ஒரு மொழி தேவை. தமிழர்களுக்குத் தமிழைப்போலவே, ஆந்திரருக்கும்—அவர்களைப்போலவே கேரளத்தாருக்கும் — அவர்களைப் போலவே, கர்நாடகத்தாருக்கும் —அவர்களைப்போலவே, மராட்டியர்களுக்கும், வங்காளிகளுக்கும், இந்தி பேசுபவர்களுக்கும், அவர்களுடைய தாய்மொழியை மட்டும் வைத்துக்கொண்டு வாழக் கூடியவர்களாக இருக்கிறார்களா என்றால் இல்லை. இந்தியத் துணைக்கண்டம் மட்டும் என்று நீங்கள் கருதாதீர்கள்—பக்கத்தில் இருக்கிற சிங்களவர்கள் சிங்களத்தை மட்டும் வைத்துக்கொண்டு வாழ்கிற நிலைமையிலிருக்கிறார்களா என்றால் இல்லை; பர்மாக்காரர்கள் பர்மாமொழியை மட்டும் வைத்துக்கொண்டு வாழ்க்கையை நடத்திக்கொள்ள அதை வைத்துக்கொண்டு அகில உலகத் தொடர்புகொள்ள விரும்புகின்ற பொழுது, தங்களுடைய தாய் மொழியோடு ஆங்கிலத்தையும் பயன்படுத்திக்கொள்ளுகிற அளவுக்கு அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

"உலகத்திலிருக்கிற ஒவ்வொரு நாட்டினரும், தங்கள்நாடு தனி நாடாக ஆகவேண்டுமென்று கருதுகிறவர்களும் — ஆக்கிக் கொண்டு இருப்பவர்களும் தங்களுடைய தாய்மொழியோடு, அகில உலகத் தொடர்புகொள்ள, அகில உலக வாணிபத்தொடர்பு கொள்ள, விஞ்ஞான அறிவை பெற அகில உலகப் பொது மொழியாக இருக்கின்ற ஆங்கிலத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த அளவோடு அமைந்திருக்கின்ற காட்சியை நாம் அகில உலகத்திலே பார்க்கிறோம்."

—தொடரும்.

'தமிழ்ச் சொல் இருக்க, பிற மொழிச் சொல் ஏன்?

டாக்டர் சேதுப்பிள்ளை உரை

"தமிழ் மொழியில் நல்ல வார்த்தைகள் இருக்கும் பொழுது, பிற மொழிச் சொற்களைப் பயன்படுத்துவதேன்? தமிழில் 'கலங்கரை விளக்கு' என்ற சொல் இருக்க 'தீபஸ்தம்பம்' என்று பிறமொழிச் சொல்லைப் பயன்படுத்துவானேன்? இது சரியானதல்ல—கூடாது"

என்று, டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை கரந்தைத் தமிழ் சங்கத்தின் ஆண்டுவிழாவில் தலைமையுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அறிவழகன் - எழிலரசி திருமணம்

அண்ணா தலைமையில் பாராட்டுவிழா

சென்னை, செப். 27—

தோழர் க. அறிவழகன் அவர்கள் கடந்த 11—9—57 அன்று நமது அண்ணா அவர்கள் தலைமையில் தோழியர் எழிலரசி அவர்களை மாயூரம் அடுத்த இலந்தங்குடியில் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார்.

அதனை ஒட்டி நேற்று மாலை சென்னை — மயிலாப்பூர் உட்லண்ட்ஸ் ஓட்டலில் ஒரு வரவேற்பு விழா நடைபெற்றது.

தோழர்கள் க. அன்பழகன், திருமாறன் அனைவரையும் வரவேற்றனர்.

தேநீர் விருந்திற்குப் பிறகு மணமக்களைப்பாராட்டிக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

பாராட்டு விழாவிற்கு அண்ணா அவர்கள் தலைமை தாங்கினார்கள். மணமக்களைப் பாராட்டியும் வாழ்த்தியும் டாக்டர் பூ. கிருஷ்ணாராவ் (சென்னை சட்ட மன்றத் தலைவர்), பி. பாலசுப்பிரமணியம் ('சண்டே அப்சர்வர்' ஆசிரியர்), எம். கே. சண்முகம் (முதல்வர், தியாகராயர் கல்லூரி), வி. பி. இராமன் (வழக்கறிஞர்), என். வி. நடராசன் (துணைப் பொதுச்செயலாளர், தி. மு. க.), இரா. செழியன் (துணை ஆசிரியர், 'மன்றம்') புலவர் நன்னன் ஆகியோர் பேசினர்.

தி. மு. க. தலைமை நிலையத்தின் சார்பில் தோழர் என். வி. நடராசன் அவர்கள் மணமக்களுக்கு மாலை அணிவித்தார்.

மணமகன் அறிவழகன் நன்றி நவில விழா இனிது முடிவுற்றது.

வாழ்க அறிவழகன்—எழிலரசி.

உலக நீதிமன்றத்தில் போர்ச்சுகல் தாவா

ஹேக், செப். 26—

இந்திய பகுதி வழியே சென்று விடுதலையடைந்த நாகர் ஹவேலி தாத்ரா பகுதிகளை மீட்க அனுமதி தரப்பட வேண்டும் என்று கோரி, உலக நீதிமன்றத்தில் போர்ச்சுகல் மனு செய்துகொண்ட வழக்கு இன்று விவாதிக்கப்பட்டது.

இந்திய அரசாங்கத்தின் சார்பாக சட்டப் பேராசிரியர் வால்டாக் விளக்கம் தந்துள்ளார்.

★

கோவா பற்றி பீட்டர் ஆல்வாரிசு

பம்பாய், செப். 25—

'கோவா நேட்டோ தளமாக்கப் பட்டாலும், நிச்சயம் இந்தியப் படைகளை அனுப்பி இந்தியப் பகுதியான கோவாவை கைப்பற்ற வேண்டியது கடமையாகும். இதைத் தவிர வேறுவழி இல்லை' என்று மக்கள் சோஷலிஸ்டு கட்சித் தலைவரும், கோவா தேசிய காங்கிரஸ் அறப்போர் குழுத் தலைவருமான பீட்டர் ஆல்வாரிசு தெரிவித்துள்ளார்.

★

சிறையில் கொடுமை

கார்வார், செப். 26—

கோவாவை மீட்க நடைபெற்று வரும் போராட்டத்தில் கைது செய்யப்பட்டவர்கள் சிறையில் கொடுமைப்படுகின்றனர் என்று முரளீதர் ரானே நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

போர்ச்சுகீசியக் கொடியை வணங்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுகின்றனராம். கைதிகள் அடிக்கப்பட்டு வைத்திய வசதியும் அளிக்கப்படாமல் கொடுமைப்படுத்தப்படுகின்றனராம்.

மக்கள் சபையின் அடுத்தக் கூட்டம்

புதுடில்லி, செப். 26—

டெல்லி மக்கள் சபையின் அடுத்தக் கூட்டம் நவம்பர் 11-ம் தேதி துவங்கி, டிசம்பர் 20-ம் தேதிவரை நீடிக்கும் என்று தெரியவருகிறது.

நம் நாடு

சென்னை 27—9—57 வெள்ளி

தாய் எட்டடி பாய்ந்தால்....!

'தாய் எட்டு அடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும்' என்பது தமிழகப் பழமொழி. அந்தக் கதையாகத்தான் இருக்கிறது, சென்னை மாநில அரசின் போக்கும்.

மாநில சர்க்கார் ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது கூடாதாம். 'வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவோம்' என எச்சரிக்கக் கூடாதாம். இப்படி ஒப்பந்தம் செய்துகொள்ளுமாறு ஊழியர்களை நிர்ப்பந்திக்கிறது சர்க்கார்.

'வேலைநிறுத்தத்தில் ஈடுபட மாட்டோம் என்றும், சர்க்காருக்கு எதிராக வேலைநிறுத்த அச்சுறுத்தலை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்த மாட்டோம் என்றும், சர்க்கார் ஊழியர்கள் தங்கள் சங்கத்திற்கான சட்டதிட்டங்களில் விதி வகுத்துக் கொள்ள வேண்டும்; இன்றேல் சங்கத்திற்குத் தரப்பட்டுள்ள அங்கீகாரத்தை ரத்து செய்து விடுவோம்' என்று இந்த மாநில காங்கிரஸ் ஆட்சியாளர், சர்க்கார் ஊழியர் சங்கத்திற்கு, தாக்கீது அனுப்பியுள்ளதாகத் தெரிய வருகிறது.

தென் சீமை நகர் ஒன்றிலிருந்து நமக்குக் கிடைத்துள்ள இந்தச் செய்தி, உண்மையானால், சர்க்கார் ஊழியர்கள் தங்களது உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்கு விழித்து எழுவதில் தாமதம் காட்டுவதற்கு இல்லை.

வேலை நிறுத்தம் கூடாது என்று ஒப்பந்தம் கேட்கிற இந்த குட்டி சர்க்காரின் எஜமானர்களான டெல்லி சர்க்கார், அண்மையில் தபால்-தந்தி மற்றும் மத்திய சர்க்கார் ஊழியர்கள் வேலை நிறுத்த நோட்டீஸ் தந்திருந்தபோது, அவர்களது நேரடி நடவடிக்கையை ஒடுக்குவதற்காக, அத்தியாவசிய சர்விசுகள் பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரில் ஒரு கருப்புச் சட்டத்தை நிறைவேற்றிக் கொண்டு, ஆயுதபாணியாகி, ஊழியர்களின் உரிமைக் குரலை ஒடுக்க முற்பட்டனர். தாய் எட்டடி பாய்ந்தது. இப்போது தமிழ் நாட்டு சர்க்கார் தனது ஊழியர்களை 'ஒப்பந்தம் செய்துகொடு' இன்றேல் சங்கத்தின் 'அங்கீகாரத்தையே ரத்து செய்துவிடுவேன்' என்று மிரட்டுகிறது—குட்டி பதினாறு அடி பாய்கிறது.

தொழிலாளமக்களின் உரிமைகளில் எல்லாம் வேலை நிறுத்த உரிமைதான் பிரதானமானது, தலையாயது என்பதை உறுதி செய்த பண்டிதர்தான், அந்த உரிமை மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு இருக்கக்கூடாது என்று 'கருப்புச் சட்டம்' கொண்டுவந்தார்.

இப்போது மாநில சர்க்கார் ஊழியர்களிடமிருந்து அந்த உரிமையைத் தட்டிப் பறித்துக் கொள்ள, கெடுபிடி செய்கிறது சென்னை சர்க்கார்.

மாநில சர்க்கார் ஊழியர்கள், இந்த உரிமையை இழந்துவிட்ட பிறகு, அவர்களுக்கு சங்கம் ஏன்? அதற்கென சட்ட திட்டங்கள் எதற்காக?

ஊழியர்கள் சங்கம் அமைப்பதே, தங்கள் சக்தியை ஒன்று திரட்டி, நியாயமான உரிமைகளையும் தேவையான நலன்களையும், போராடிப் பெறுவதற்காகத் தானே தவிர, பொழுதுபோக்குவதற்கு வழி அமைப்பதற்கு அல்லவே! போராடுவதற்கு உரிய உரிமையைக் காவு கொடுத்துவிட்டால், சங்கம் பொழுது போக்குவதற்காகத்தானே பயன்பட முடியும்?

வேலை நிறுத்தம் போன்ற நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும்கூட, இந்த சர்க்கார், அவற்றை முறியடிப்பதற்கான சகல வழிகளையும் தேடி அலைகிறதே தவிர, அனைவராலும், தங்களாலேகூட, நியாயம் என்று ஒப்புக்கொள்ளப்பட்ட ஊழியர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முன்வருவதில்லை. தமிழ்நாட்டு சர்க்கார் ஊழியர்களைப் பொறுத்து, முதல் சம்பளக் கமிஷன் தீர்ப்பின் அடிப்படையிலேனும் சம்பளம், கிராக்கிப்படி முதலியன தரப்பட வேண்டும் என்ற அவர்களின் கோரிக்கை, ஆண்டுகள் பலவாகியும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இந்த இலட்சணத்தில், அந்த வேலை நிறுத்த உரிமையையும் இழந்துவிட்டால், அவர்கள், தங்களுக்குள்ள குறைகளுக்குப் பரிகாரம் தேடிக்கொள்ள வழிதான் என்ன? கோரியவுடன், நியாயம் எனப்பட்டால், தேவைகளைப் பூர்த்தி செய்துவிடுகிற, கருணை வள்ளலாக இந்த மாநில சர்க்கார் இருப்பதாக எவரும் சொல்லமாட்டார்கள். அவ்வாறிருக்கையில், ஜீவாதாரமான வேலை நிறுத்த உரிமையை தங்களிடமிருந்து சர்க்கார் தட்டிப் பறித்துக்கொள்வதை, ஊழியர்கள் எவ்வாறு சகித்துக் கொள்வார்கள்.

சர்க்கார் ஊழியர்களைப் பொறுத்து, அவர்கள் ஏற்கனவேயே பல்வகையான கட்டுத்திட்டங்களுக்கு ஆளாக்கப்பட்டு முழு அடிமைகளைப் போல் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள். பிரிட்டன் போன்ற பல அன்னிய நாடுகளில், இவர்களைப் போன்ற 'சிவில்' ஊழியர்களுக்குக் கிடைத்திருக்கிற உரிமைகளில் சிலகூட, இவர்களுக்குக் கிடையாது. இந்த நிலையில், இவர்கள் தங்களது வேலைநிறுத்த உரிமையையும் பறிகொடுத்துவிட்டால், மிக மட்டரகமான பிற்போக்குவாதிகளாக இன்றைய ஆட்சியாளரிடமிருந்து, தங்களது நியாயமான தேவைகள் எதையும் கொஞ்சமாகக்கூடப் பெறுகிற வாய்ப்பை அடியோடு இழந்து தவிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

இதனுடைய கொடிய விளைவாக ஏற்கனவே ஊழல் நாற்றமடிக்கும் நிர்வாகம் மேலும் சீர்குலையும் என்பதையும் சொல்லத் தேவையில்லை. மனத் திருப்தி இல்லாத ஊழியர்களால், மக்களுக்குத் தேவையான சிறந்த நிர்வாகத்தைத் தரமுடியாது என்பதும் யாவரும் உணர்ந்துகொண்டிருப்பதுதான்.

எனவே, சென்னை சர்க்காரின் கெடுபிடி அநியாயமானது என்பதால், அதற்கு எதிராக தங்கள் உரிமைகளைக் காப்பாற்றிக்கொள்ள சர்க்கார் ஊழியர்கள் மேற்கொள்ளும் எல்லா நடவடிக்கைகளுக்கும், மக்கள் அனைவரும் துணை நிற்பர்.

சர்க்காரின் உரிமை பறிக்கும் இந்தப் போக்கை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

வீடு யாருடையது என்ற தீர்ப்பிற்குப் பிறகல்லவா வாசற்படிபற்றி பேச்சு

வெள்ளையரின் ஈட்டிமுனை காப்பாற்றிய இந்தியா கதர் நூலால் கப்பாற்றப்பட முடியாது

திருவண்ணாமலை மாநாட்டில் அண்ணா

திருவண்ணாமலையில் கடந்த 21—9—57-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் தொடர்ச்சி:—

"இந்த வீடும் உன்னுடையது தான் என்று தீர்மானித்தால் பிறகு 'நீ, அதற்கு என்ன வாசற்படி வைக்கலாம்' என்று தீர்மானித்துக் கொள். வீடு உன்னுடையதா என்னுடையதா என்பது வழக்கு மன்றத்திலே இருக்கிறது. உன்னுடைய வழக்கறிஞரும் பேசுகின்றார்; என்னுடைய வழக்கறிஞரும் பேசுகின்றார். நீதிபதிக்கு மயக்கமிருக்கின்ற காரணத்தினால் தீர்ப்பு இன்னும் சரியாகக் கொடுக்கவில்லை. வழக்கறிஞரின் வாதத்திலே ஒன்றும் தப்பு இல்லை. அந்தத் தீர்ப்புக் கிடைத்து, வீடு உன்னுடையதா?-என்னுடையதா என்று ஏற்பட்டப் பிறகல்லவா உன்னுடைய விருப்பப்படி வாசற்படி இருப்பதா—என்னுடைய விருப்பப்படி வாசற்படி இருப்பதா என்பது தீர்மானிக்கப்பட வேண்டும். அதைப்போல இந்தியா ஒன்றாக இருப்பதா? அல்லது இந்தியா என்பது கற்பனையிலே உதித்தது; வெள்ளைக்காரன் ஈட்டி முனையினாலே கட்டிக் காப்பாற்றப்பட்டது; அதை கதர் நூலினாலே கட்டி வைத்தால் நீண்ட காலத்துக்கு நிலைக்காது; ஆகையினால் இந்தியா என்பது இனவழி பிரிந்துதான் திருமெனற எங்களுடைய இலட்சியம் வெல்கிறதா? இல்லையா என்பதற்கு அவகாசம் தர வேண்டும். அது முடிந்த பிறகு நாங்கள் தோற்றோமென்றால் 'திராவிட நாடு கிடைக்காது' என்று நாங்களே சொல்லிவிட்டால், 'இந்தியா ஒன்றாகத்தான் இருக்கவேண்டும்' என்று நாங்களும் சேர்ந்து சொன்னால், ஒன்றாக இருக்கிற இந்தியாவுக்கு ஏதாவது மொழி வேண்டாமா? அப்பொழுதுகூட இந்தி அல்ல; ஏதாவது ஒரு மொழி வேண்டாமா என்பதுதான் அப்பொழுது பிரச்சினை.

"ஓட்டலுக்குப் போகின்ற நேரத்தில் 'சாப்பாடு ஆகிவிட்டதா?' என்று கேட்ட பிறகுதான் 'என்ன சமையல்?' என்று கேட்பார்களே தவிர, 'என்ன சமையல் இன்றையத் தினம்?—'கத்தரிக்காய் கூட்டு; முருங்கைக்காய் சாம்பார்'—'சரி போடு!' 'இன்னும் ஆகவில்லை' என்று சொல்லுவதைப் போல் திராவிட நாடு பிரிவினை தீராமலிருக்கின்ற பொழுது உனக்கென்ன அத்தனை அவசரம்? திராவிட நாடு பிரிவினைக் கிளர்ச்சி வலுக்கின்றது; அந்த வலுக்கின்ற கிளர்ச்சியை ஒழிக்கின்ற, நீ செய்கின்ற சதித்திட்டங்களிலே இது ஒன்று என்பது தவிர, இது மொழித் திட்டம் அல்ல என்பதை நான் பகிரங்கமாகக் குற்றம்சாட்ட விரும்புகின்றேன்.

"வடநாட்டிலே உள்ளவர்கள், தென்னகத்தாரை — தமிழகத்தாரை, சிறப்பாகவும் குறிப்பாகவும் திராவிட இயக்கத்தாரை தலையெடுக்க விடாமல் தட்ட வேண்டுமானால் தமிழ் மொழியிலே இருக்கின்ற ஆர்வத்தைக் குலைக்க வேண்டும்; தமிழ் மொழிக்கு இருக்கின்ற இடத்தைப் பறிக்கவேண்டும்; தமிழ் மொழியினாலே சாதிக்க முடியாத காரியத்தை இந்தியினாலே சாதிக்கமுடியும் என்று இளிச்சவாயர்களை நம்பவைக்கச் செய்ய வேண்டும். அதற்குப் பிறகு அவர்கள் தலையைத் தடவலாம் என்ற சதித்திட்டம் தவிர, இதற்கென்ன காரணம் காட்டுகிறார்கள்?

"நாட்டிலே இன்றையத் தினம் இந்தி 1960-லே வருவதா? 70லே வருவதா என்பதா மிக அவசரமான பிரச்சினை? மூன்று வேளை சோறு போடுவதற்கு உன்னுடைய ஆட்சியிலே வக்கு இல்லை; ஏறியிருக்கிற விலைவாசியை இறக்குவதற்கு உனக்குத் தெரியவில்லை; உன்னுடைய நாட்டிலே நிதியமைச்சர் கையிலே பிச்சைப் பாத்திரத்தைக் கொடுத்து, ஒவ்வொரு நாட்டுக்கு ஒவ்வொரு மாதம் துரத்துகிறாய் வெட்கமின்றி!

"காலஞ் சென்ற வியாகத் அலிகான் சொன்னார் — 'எந்த நாடு கையிலே பிச்சைப் பாத்திரத்தை வைத்துக் கொண்டு, கடனுக்காக வெளி நாட்டுக்குப் போகின்றதோ அந்த நாடு சுதந்தரமாக வாழமுடியாது' என்று சொன்னார். உன்னுடைய நிதியமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரை, (நான் நண்பர்கள் மூலமாகக் கேள்விப்படுகிறேன், அவருக்கு சாதாரணமாக குடல் கோளாறு என்று—வயிற்றுக்கோளாறு என்று. அப்படிப்பட்டவரை) நீ பிச்சைப் பாத்திரத்தைக் கையிலே கொடுத்து அமெரிக்காவுக்கு அனுப்பியிருக்கிறாய். ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறுமா — நிறைவேறாதா என்று ஆருடம் பார்க்கவேண்டிய நிலைமை நாட்டிலே ஏற்பட்டிருக்கின்றது. இவ்வளவு அவசரமான காரியங்கள் இருக்கின்ற பொழுது, இவைகள் எதைப் பற்றியும் கவலைப்படாமல், இந்தியைப் புகுத்த அவசர அவசரமாகத் துணிகின்ற காரியம் என்ன?

"தமிழ் மொழி ஒன்றுதான், தமிழ்த் தோழர்களும்—திராவிடத் தோழர்களும் தெரிந்து கொள்ளவேண்டும் — விடுதலை வேட்கையை-விடுதலை உணர்ச்சியை தமிழ் நாட்டு மக்கள் மட்டும்தான் இன்றையத் தினம் முழு அளவிலே பெற்றிருக்கின்றார்கள். என்னுடைய நண்பர்களிலே பல பேர் வங்காளத்தைப் பற்றி குறிப்பிட்டார்கள்; மராட்டியத்தைப் பற்றி எடுத்துப் பேசினார்கள்; பாஞ்சாலத்தை எடுத்துச் சொன்னார்கள். அங்கேயெல்லாம் வீர உணர்ச்சியுள்ள மக்கள் ஏராளமாக இருக்கின்றார்கள்; மறுக்கவில்லை. அங்கே அறிவாளிகள் நம்மைவிட அதிகப் பேர் இருக்கக்கூடும்; அதைப் பற்றி நான் ஐயப்படவில்லை. ஆனால், தமிழ் மொழி நமக்கு அளிக்கின்ற விடுதலை வேட்கையை வங்காள மொழியும் வங்காளிக்கு அளித்திருக்காது. பஞ்சாபி மொழியும் பஞ்சாபிகளுக்கு அளித்திருக்காது. அப்படிப்பட்ட விடுதலை வேட்கையை தமிழ்மொழி தமிழர்களுக்கு அளித்திருக்கிறது. அப்படிப்பட்ட தமிழ் மொழியை அழித்தால், விடுதலை வேட்கை அழிந்துவிடும். விடுதலை வேட்கை அழிந்துபட்டால் வடநாட்டு ஆதிக்கம் தமிழகத்திலே பூரணமாகிவிடும். அதற்குப் பிறகு 'திராவிட நாடு பிரிவினை என்ற பேச்சுக்கெல்லாம் இடமிருக்காது'—என்ற சதித் திட்டத்திலே இது விளைந்ததே தவிர வேறு இதற்குக் காரணம் இருப்பதாக என்னாலே யூகித்துக்கொள்ள முடியவில்லை. வேறு ஏதாவது தகுந்த சாதனங்கள் இருக்குமானால், எனக்குப் பதிலளிக்க காங்கிரஸ் அமைச்சர்களும் காங்கிரஸ் தலைவர்களும் கடமைப்பட்டிருக்கின்றார்கள்; அவர்கள் சொல்லுகின்ற பதிலைக் கேட்பதற்கு நாங்கள் ஆவலோடு காத்துக்கொண்டிருக்கின்றோம்."

(தொடரும்)

விற்பனையைக் குறைக்கும் திட்டமா?

கைத்தறி விற்பனைத் தள்ளுபடி குறைக்கப்படுமாம்

புதுடில்லி, செப். 25—

கைத்தறித் துணிகள் வாங்கப்படும்போது பொதுமக்களுக்குத் தரப்படும் தள்ளுபடி டிசம்பர் முதல் குறைக்கப்படுகிறது.

இப்போது கூட்டுறவு சங்க வாளரின் சங்கங்கள் விற்பனை செய்யும் துணிகளுக்கு ரூபாய்க்கு 9 புதிய காசுகளும், மற்ற நிறுவனங்களில் 6 புதிய காசுகளும் தரப்படுகிறது. பம்பாயில் 12 காசுகள் தரப்படுகிறது.

டிசம்பர் முதல் எங்கும் எல்லாரக கைத்தறிகளுக்கும் 6 புதிய காசுகள் மட்டுமே பொதுமக்களுக்குத் தரப்படுமாம்.

இந்தக் குறைப்புமூலம் பணம் மிகுதிபாக்கி, அதை கைத்தறித் தொழில் வளர்ச்சிக்காக மாநிலங்களுக்கு வழங்கப் போவதாக இப்போது அறிவிக்கின்றனர்.

இன்றைய உலகத்தின் முக்கியப் பிரச்சினை

'பணவீக்கம்தான்' என்கிறார் அமெரிக்கத் தலைவர்

"பணவீக்கமே இன்றைய உலகத்தின் முக்கிய பிரச்சினையாகும்" என்று அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் உலகப் பாங்கியின் ஆண்டுவிழாவில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் பேசுகையில் 'பொருளாதாரத் துறையில் முன்னேறுவதற்குப் பணவீக்கம் பெருந்தடையாக உள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

'மக்களின் உழைப்பாலும், நல்ல முயற்சியாலும் மட்டுமே ஒரு நாடு பொருளாதாரத்துறையில் முன்னேற முடியும்' என்றும் அவர் கூறியுள்ளார்.

'ஐ. நா.-வில் அங்கம் வகிக்கும் 64 நாடுகளும் தங்களுக்குள் ஒத்துழைப்பு நல்கி முன்னேற வேண்டும்' என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தியாவில் ரூ. 4 கோடி மதிப்புள்ள பிளாஸ்டிக் சாமான்களை முக்கியதொழிற்சாலைகள் 1956-ம் ஆண்டில் தயாரித்துள்ளனஎன்று மதிப்பிடப்பட்டுள்ளது. இப்போது மொத்தம் 120 நிறுவனங்கள் பிளாஸ்டிக் சாமான் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளதாம்.

வீட்டைத் துறந்தேன்—ஆனால் நாட்டையும் மொழியையும் மறவேன்

தாய் மொழி காக்க — இந்தியை ஒழிக்க போரிடத் தயங்கேன்

இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அருணகிரி அடிகள் தலைமையுரை

திருவண்ணாமலையில் கடந்த 21—9—57 அன்று நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய திரு. அருணகிரி அடிகளாரின் தலைமையுரை இங்கு தரப்படுகிறது :—

"தமிழ்நாட்டுக்கு, இந்தி பொது மொழியாகத் தகுதியல்ல என்ற பேரைச் செய்வதற்காகக் கூட்டியுள்ள இந்த மாநாட்டிற்கு என்னைத் தலைமையாக இருந்து நடத்துமாறு இங்கு மாலை போட்டு விட்டிருக்கிறார்கள். ஏனென்றால் பலிக்கடாவுக்கு முதலில் வேப்பஞ்சேலை கட்டுவது, கழுத்திலே மாலை போடுவது, குங்குமப் பொட்டு வைப்பது, கொண்டு போய் பலி பீடத்திலே வைத்து வெட்டுவது வழக்கம். அதுபோல 'தமிழ்த் தாய்க்காக நீ பலியாகு, தமிழ்த்தாயினுடைய வளர்ச்சிக்காக உன்னுடைய உயிரை தியாகம் செய்' நீ தியாகம் செய்தாயேயானால், உன்னைச் சார்ந்த உன் இனத்தவராகிய இளைஞர்களெல்லாம் தியாகம் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நீ வந்து முன்னே நில்' என்பதாக மாலை போட்டுவிட்டிருக்கிறார்கள்.

"அன்பர்களே! நீங்கள் எல்லோரும், தமிழ் நாடு, தமிழ் மொழி, தமிழர் குணம், தமிழர் நலம், தமிழருடைய உரிமை, ஆகியவைகளைக்காக்க—உணர்ச்சியால், எழுச்சியால்—அதற்காவன செய்யவேண்டும், இதற்கு எத்தனைத் தடைகள் இருக்கின்றனவோ அவைகளையெல்லாம் ஒழிக்கவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொள்வதற்காக இங்கு வந்து குழுமியிருக்கின்றீர்கள் என்று நினைக்கின்றேன். ஆகையினாலே, இத்தகைய ஒரு பெரும் நிகழ்ச்சியில் என்னையும் உங்களில் ஒருவனாக ஏற்று தலைமை தாங்கச் செய்தமைக்காக—இந்தச் சிறப்புகளுக்கெல்லாம் என்னை ஆளாக்கிய தி. மு. கழகத்துக்கும், கழகத் தோழர்களுக்கும், கழகத் தலைவர்களுக்கும் உளமார்ந்த நன்றியறிதலாகிய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இந்த நிகழ்ச்சிக்காக வேண்டி இங்கு அமைத்திருக்கிற பந்தலைப் பார்த்தாலே, திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுடைய திறமை, இன்னது என்று விளங்கும்.

அவர்கள் செயலாற்றும் வல்லவர்கள் என்பதை நிரூபிக்கும். செயலாற்றும் திறமையைத் தமிழ் நாட்டில் இளைஞர்கள் பெற்றிருப்பது கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

"காவியுடையும், உத்திராட்சமும், விபூதியும் அணிந்திருக்கும் என்னை இங்கு அழைத்து திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டிற்கு தலைமை வகிக்க செய்திருப்பது பொருத்தமில்லை என்று சிலர் நினைக்கலாம்.

இதற்கு இந்த இயக்கத்தார் என்மேல் கொண்டுள்ள பழைய நேசமும் பாசமுமே காரணம், வேறொன்றுமில்லை. ஆனால்பொதுவாக ஒரு கொள்கை என்னவென்றால் இந்த சன்னியாசி உலகம் இருக்கிறதே அது 'தமிழ் நாட்டுக்கு நல்லமுறையில் பயன்படும் வகையில் நடந்துகொள்வதில்லை' என்பது ஒரு குற்றச்சாட்டு. அதை நான் மிகவும் ஏற்றுக்கொள்கிறேன். அதிலே, அந்தச் சூத்திரத்திலே நான் புறநடை. ஆகையினாலே என்னை அந்தக் கூட்டத்தோடு சேர்த்துவிடாதீர்கள் நான் தமிழ் மறக்குடியில் பிறந்தவன்.

"வீட்டைத் துறந்து சென்ற வீரத் துறவியுந்தான் நாட்டைத் துறப்பனோடி-தமிழ்த் தங்கமே நயஞ்சம் செய்வானோடி? என்று நானே பாடியிருக்கிறேன் ஒரு பாட்டு.

"ஆகையினாலே வீட்டைத்தான் துறந்து சென்றேன். என் தாய் நாட்டை, தாய் மொழியை, என்னுடைய இனத்தைத் துறந்து சென்றுவிடவில்லை. என்னுடைய இனந்தானே இன்றைக்கு எனக்கு சோறு போடுகிறது? அதனாலே அதைத் துறந்து சென்றுவிடவில்லை. அப்படி ஒருவன் போவானேயானால் அவன் நன்றி கொன்றவனாவான். அவனுடைய துறவு அவன் நாட்டுக்கும், மொழிக்கும், இனத்துக்கும் பயன்படவேண்டும். அப்படிப் பயன்படவில்லையானால் அது துறவு அல்ல.

"அதனாலே அந்நெறியில் நின்று நான் என்னாலே வேண்டிய தொண்டுகள் எவ்வளவு செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்து நான் இப்பொழுது ஒய்வு பெற்றிருக்கிறேன்.

"இங்கு குழுமியுள்ள இளைஞர்களுக்கு தமிழ் நாட்டுக்கு தமிழ் மொழிக்கு நான் செய்த சேவைகளை அறியமுடியாது. 30 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் என் தொண்டு இன்னது என்று அறிந்திருக்கமுடியும்.

அந்தக் காலத்திலே 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று நாம் சொன்ன நேரத்தில் கிண்டல் சித்திரம் எழுதிய ஆனந்தவிகடனும், 'எலிவலை எலிகளுக்கே' என்றவர்களும், இன்று 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று கூறி நம் கொள்கைவழி வரத் துவங்கியிருக்கிறார்கள்.

"1937 வரை நான் காங்கிரசுக்கு உழைத்திருக்கிறேன். காந்தியடிகளை வரவேற்று வட சென்னையில் ஒரு கூட்டம்போட்டு வாழ்த்துப் பாடிக்கொடுத்தவன் நான்.

"1937ல் 100 பள்ளிகளிலே இந்தியைக் கட்டாயமாகத் திணிக்கப்போகிறேன் என்று அறிக்கை விட்டார் இராசகோபாலாச்சாரியார். நாங்கள் நூறு பேர் சேர்ந்து மாம்பலத்தில் ஆச்சாரியார் பேசிய கூட்டம் ஒன்றிற்குச் சென்றோம். நான் ஆச்சாரியாரைக் கேட்டேன், 'தமிழ் தாய்க்கு ஒரு நோயைக்கொண்டு வந்து புகுத்துகிறீர்களே, அது நல்ல நோயல்லவே, தொழுநோயாய் இருக்கின்றதே, தொழுநோய் பிடித்தால் கைகால்களெல்லாம் குறைந்துபோய் விடுமென் பார்களே, எத்தனையோ நோயெல்லாம் வந்து எங்கள் தாயின் உடலிலே அம்மை வார்த்ததுபோல் புள்ளிகள் விழுந்திருக்கின்றனவே, என்றேன். இங்கு என்னென்ன மொழிகள் வந்தன? துலுக்கர்கள் மொழி, ஆங்கிலம், ஆகியவை வந்தன. இதனாலேயே தமிழ் குலைந்தது. இது போதாதென்று இந்தி மொழித் தொழுநோயையும் கொண்டுவந்து புகுத்துகிறீர்களே என்று சொல்லி அதனால் ஏற்படும் கெடுதலை எடுத்துரைத்தேன்.

'இந்தியினால் தமிழுக்குக் கெடுதி வராது என்றாவது சொல்லுங்கள்' என்றேன். அதற்கு அவர், கொஞ்சம் பொறு 10 நிமிடம் கழித்து உனக்குப் பதில் சொல்லுகிறேன் என்றார். இறுதிவரை காத்திருந்தேன். பதிலே சொல்லவில்லை. அதற்குள் போலீசைத் தருவித்துவிட்டார். கலாட்டா செய்வதாகக் கூறி போலீசார் அடக்கவந்துவிட்டனர். அதோடு காங்கிரஸ் ஒழிந்துவிட்டதாகக் கூறி நானும் காங்கிரசுக்கு முழுக்கு போட்டுவிட்டு விலகி வந்துவிட்டேன். அன்று முதல் நான் இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்டேன்.

"அந்தக் காலத்தில் நாங்கள், ஆச்சாரியாரின் தலை கிறுகிறுக்கப் பண்ணினோம். பல்லடம் பொன்னுசாமி என்னும் இளைஞன் ஆச்சாரியார் வீட்டுக் கெதிரில் மறியல் நடத்தினர். அப்பொழுது மழை பெய்து கொண்டிருந்தது அவ்விளைஞனின் காலில் ஒரு பாம்பு வந்து சுற்றிக்கொண்டது. பாம்பு சுற்றிக்கொண்டும் அந்த இளைஞன் சற்றும் அஞ்சவில்லை. போலீசாரெல்லாம் வந்து அவ்விளைஞனிடம், பாம்பு சுற்றிக் கொணடிருப்பதைக் கூறி அப்பால் நகரச் சொன்னார்கள். அதற்கு அவர் சிறிது அசையாமல் 'நான் சாகத் துணிந்துதானே சத்தியாக்கிரகத்திலே ஈடுபட்டிருக்கிறேன்' என்று கூறி உறுதியுடன் நின்றார். பிறகு அந்தப் பாம்பு தானே போய்விட்டது. அவ்வளவு உறுதியுடன் அந்தக் காலத்தில் போராடினோம்.

"கோடம்பாக்கத்திலே மறைமலையடிகள் தலைமையிலே சைதாப்பேட்டை வட்ட இந்தி எதிர்ப்பு மாநாடு நடந்தது. அங்கு சென்று உட்கார்ந்தேன். அங்கு செய்தி வந்தது, பல்லடம் பொன்னுசாமி கைது என்று. உடனே நான் எழுந்து, எல்லோரையும் மாநாடு முடிந்ததும் நாம் எல்லோரும் எழுந்து ஆச்சாரியார் வீடுநோக்கிச் செல்லவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அப்பொழுது சி. டி. நாயகம் இந்தி எதிர்ப்புப் போருக்கு முதல் சர்வாதிகாரியர் இருந்தார். சுமார் 2000 பேர் கொண்ட ஒரு மைல் நீள ஊர்வலமாக மாம்பலம் ஆச்சாரியார் வீடுநோக்கிச் சென்றோம். அங்கு சென்று எதிர்ப்பு முழக்கங்களை முழங்கிவிட்டு மாம்பலம் வெங்கட்நாராயண சாலையில் இருந்த எதிர்ப்புப் பாசறையை அடைந்தோம். போலீஸ்படையும் ஏராளமாக எங்கள் பின்னால் வந்தார்கள். அப்பொழுது எங்களுடனிருந்த சுவாமி சண்முகானந்த அடிகளைப் போலீசார் கைது செய்தனர். இரண்டாவது சர்வாதிகாரியான ஈழத்தடிகளையும் கைது செய்தனர். 3-வது சர்வாதிகாரியாக நான் பணியாற்றினேன்.

"நான் இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கும்பொழுது பெரியார் வந்தார். அப்பொழுதுதான் பெரியார் எங்களுடன் இயக்கத்தில் பங்குகொள்ளத் துவங்கினர்.

நான் தனித் தமிழன். துறவி எனக் கருதவேண்டாம். "துறவிக்கு வேந்தனும் துரும்பு" என்பதைக் கருதி நான் அப்பொழுது எதற்கும் அஞ்சாமல் பணியாற்றி வந்தேன்.

(4-ம் பக்கம் பார்க்க)

அமெரிக்க நாட்டில் நிறவெறித் தாண்டவம்

நீக்ரோவர்மீது போலீஸ் துப்பாக்கிப்பிரயோகம்

ஐசனோவர் நடவடிக்கை எடுக்கிறார்

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒன்றான ஆர்கன்சாஸ் ராஜ்யத்தில் நீக்ரோவருக்கு எதிராக வெள்ளையர்களின் நிறவெறி கோரத் தாண்டவம் புரிகிறது.

பள்ளிகளில் வெள்ளையரும் நீக்ரோவரும் ஒன்றாகவே பயில வேண்டும் என்ற சட்டத்திற்கு எதிராக வெள்ளையர்கள் பலாத்காரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.

லிட்டில்ராக் உயர்நிலைப் பள்ளி ஒன்றிற்கு வந்த எட்டு நீக்ரோ மாணவர்களை அடித்துத் துன்புறுத்தி வெறியாட்டம் ஆடியிருக்கின்றனர் வெள்ளையர்கள். இதன் விளைவாக அந்த மாணவர்கள் போலீஸ் வண்டியில் வீடுகளுக்குத் திருப்பப்பட்டனராம்.

தொடர்ந்து, நடுத்தெருக்களில் வெள்ளையர்கள், நீக்ரோவரை அடித்துத் தாக்குவது போன்ற அட்டகாசங்களில் தாராளமாக ஈடுபட்டிருக்கின்றனர்.

போலீஸ் அரண்களைமீறி கலாட்டா செய்த கூட்டத்திலிருந்து இருவரை மட்டும் போலீசார் கைது செய்தனராம்.

ஐசனோவர் அறிக்கை

ஆர்கன்சாஸ் தேசிய பாதுகாப்புப்படை, இனி பெடரல் சர்க்காரின் கண்காணிப்பிற்கு வரும் என்று குறிப்பிட்டு குடியரசுத் தலைவர் ஐசனோவர் நியூபோர்ட்டிலிருந்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

தனது முன்னைய அறிக்கையில் அவர், ஆர்கன்சாஸ் ராஜ்யத்தில் சட்டம் மதிக்கப்படுவதற்கும் ஒழுங்கு நிலைநாட்டப்படுவதற்கும் தம்மிடம் உள்ள அதிகாரம் அத்தனையையும் பயன்படுத்தத்தயங்கமாட்டார் எனவும் ஆர்கன்சாஸ் மக்கள், அமெரிக்க மக்களின் உணர்வையும், நேர்மைப் பண்பையும் அறிந்தவர்களே என்றும் அவர்கள் தீவிரவாதிகளின் கையில் சிக்கி, அமெரிக்கப் பண்பின் சிறப்பைக் குலைக்கக்கூடாதா எனவும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

துப்பாக்கிப் பிரயோகம்

நீக்ரோவர் சென்று கொண்டிருந்த வண்டி ஒன்றின்மீது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும், இதனால் ஒருவர் காயமடைந்தார் என்றும் இதன் காரணம் தெரியவில்லை என்றும் லிட்டில் ராக் செய்தி ஒன்று கூறுகிறது.

இந்தியாவில் எஃகு!

உலகத்தில் பிரேசில் நாட்டுக்கு அடுத்து இந்தியாவில் அதிகமாக உயர்ந்த ரக எஃகு சத்துக்கள் உள்ளனவாம். உலக உற்பத்தியில் இந்தியா 2 சதவிகிதம் மட்டுமே எஃகு உற்பத்தி செய்கிறதாம். அமெரிக்கா 43 சதவிகிதமும் ரஷ்யா 18 சதவிகிதமும் உலக எஃகு உற்பத்தியில் பங்கு கொள்கின்றனவாம்.

ஆண்டுதோறும் இந்தியா 15 இலட்சம் டன் எஃகு வெளிப்படுத்துகிறதாம். இங்கிலாந்து 170 இலட்சமும், அமெரிக்கா 1,000 இலட்சமும் வெளிப்படுத்துகின்றனவாம்.

இந்தியாவில் தனி நபருக்கு 11 பவுண்டு எஃகும் அமெரிக்காவில் 1,237 பவுண்டுகளும் இங்கிலாந்தில் 628 பவுண்டுகளும் ஆஸ்திரேலியாவில் 540 பவுண்டுகளும் இத்தாலியில் 137 பவுண்டுகளும் தனி நபருக்குத் தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நாட்டின் எஃகுத் தொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன், 1957—58-ல் 1·65 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டதாம்.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்ததும் ஒரிசாவில் ரூர்கேலா என்ற இடத்திலும், மத்தியப் பிரதேசத்தில் பிலாய் என்ற இடத்திலும் மேற்கு வங்கத்தில் துர்காபூர் என்ற இடத்திலும் இந்திய அரசாங்கம் 3 எஃகுத் தொழிற்சாலைகளை ஏற்படுத்த முடிவு செய்திருக்கிறதாம்.

இந்த மூன்று எஃகுத் தொழிற்சாலைகளுக்கும் ரூ. 353 கோடி செலவிட முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

1960-ல் மொத்தம் 60 இலட்சம் டன் எஃகு உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாம்.

தமிழகத்தில் பஞ்சம்!

விவசாயிகள் பிச்சை எடுக்கும் பரிதாபம்

ஸ்ரீவில்லிபுத்தூர், செப். 25—சங்கரன்கோவில், புளியங்குடி, ஆயாபட்டி ஆகிய ஊர்களில் மழையில்லாத காரணத்தால் பயிரிட முடியவில்லையாம்! பஞ்சம் தலைதூக்கிவிட்டதாம். விவசாயிகள் பரிதவிக்கின்றனராம். குடும்பம் குடும்பமாக ஊரைவிட்டு வெளியேறி பிச்சை எடுத்துப் பிழைக்கின்றனராம்! கையில் இருந்த பொருளைக் கொண்டு விவசாயத்தை நம்பி தொழிலில் ஈடுபட்டனராம். மழை சதி செய்துவிட்டதாம்.

கடன் தொல்லைகளிலிருந்து மீள சொத்துக்களைப் பாதி விலைக்கு விற்றுவிட நேர்ந்ததாம். எவரும் வேறு வேலையும் தர முன்வரவில்லையாம்.

வேலை செய்யும் திறமையும் வலிமையும் இருந்தும் இந்த விவசாயிகள் பட்டினி கிடக்கின்றனராம்.

இவ்வாறு 'தினமலர்' நிருபர் தகவல் திரட்டி தந்துள்ளதை 22—9—57 இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

'திருவனந்தபுரம் நீதிமன்றம் தற்காலிகமானதே'

திருவனந்தபுரம், செப். 25—திருவனந்தபுரத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள நீதிமன்ற கிளை தற்காலிகமானது என்றும், விசாரணையில் உள்ள வழக்குகள் தீர்க்கப்பட்ட உடனே, அல்லது அதற்கு முன்பாகவோ இந்த நீதிமன்றம் கலைக்கப்படலாம் என்றும், கேரளத்தின் தலைமை நீதிபதி வழக்கறிஞர்கள் சங்கத்திற்கு தெரிவித்துள்ளார்.

ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் நீதிமன்றம் இருக்கக்கூடாது என்பது நிர்ணயிக்கப்பட்ட விதியாம். இதைக் காரணமாகக் கொண்டு, திருவனந்தபுரத்தில் உள்ள நீதிமன்றத்திற்கு வழக்குகளைப் பதிவு செய்துகொள்ளும் அதிகாரம் தர இயலாதெனவும் நீதிபதி அறிவித்துள்ளார்.

மாணவர் எதிர்ப்பு

டோக்கியோ, செப். 26—1000-க்கு மேற்பட்ட மாணவர்களுக்கும், சப்பான் போலீசுக்கும் மோதல் ஏற்பட்டுள்ளது. அமெரிக்க விமானத்தளம் விரிவுபடுத்தப்படுவதை மாணவர்கள் எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனராம். 25 மாணவர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நிலக்கொடை இயக்கம்

கம்யூனிஸ்டுத் தலைவர் எதிர்ப்பு

அம்பாலா, செப். 26—

'நிலத்தில் இருந்து குடியானவர்களை வெளியேற்றுவதையே இன்னும் நிறுத்தமுடியவில்லை. இப்படியிருக்க வேண்டுகோள் விடுத்து நிலத்தைப் பகிர்வது இயன்ற காரியமா? இன்னும் 100 ஆண்டுகள் சென்றாலும் நிலச் சீர்திருத்தம் முடிக்க முடியாது. உழவருக்கே நிலத்தை உடன்தரவேண்டும்'

என்று, கம்யூனிஸ்டு தலைவர் ஏ. கே. கோபாலன் ஒரு அறிக்கை விடுத்துள்ளார்.

வினோபாவின் இயக்கத்திற்கு ஆதரவளித்து மைசூரில் நடைபெற்ற மாநாட்டில் சேரள முதலமைச்சர் நம்பூதிரிபாத் கலந்துக்கொண்டு ஆதரவளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கம்யூனிஸ்டுகளின் தொழிற்சங்க முறை!

திருவனந்தபுரம், செப். 26—

புரட்சி சோஷியலிஸ்டு கட்சியினர்வசம் உள்ள சங்கங்களை உடைக்கத் திட்டமிட்டு, கம்யூனிஸ்டுகள் தகாத செயல்களில் ஈடுபட்டுள்ளனர் என்று செய்திகள் வருகின்றன.

ரசாயன தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு. டி. கே. ராஜு என்பவரை சாவாரா என்ற பகுதியில் குத்திவிட்டனராம் கம்யூனிஸ்டுகள்.

பத்மநாப பிள்ளை என்ற மற்றொரு ஊழியரும் கொல்லப்பட்டதாக திரு. என். நீலகண்ட நாயர் தெரிவித்துள்ளார்.

இந்திய முதலமைச்சருக்கும், உள்நாட்டு அமைச்சருக்கும் தொலைவரிகள் மூலம் செய்தி அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

அகில இந்திய தபால்காரர் 4-ம் தர ஊழியர் கோரிக்கை

சென்னை, செப். 26—

அகில இந்திய தபால்காரர் 4-ம் தர சிப்பந்திகளின் தென்கிளை சங்கத்தின் பொது உறுப்பினர் கூட்டம் திரு. சந்தானம் தலைமையில் மயிலை அஞ்சல் நிலயத்தில் நடைபெற்றுள்ளது.

'முதல் ஊதிய நிர்ணயக் குழு அறிவித்ததுபோல வாழ்க்கைத் தரப் புள்ளியில் ஒவ்வொரு 20 புள்ளிகளுக்கும் ரூபாய் 5 விதம் பஞ்சப்படியில் அதிகப்படுத்தி சனவரி 1956 முதல் தரவேண்டும்' என்று ஒரு தீர்மானம் திரு. இராசபாதர் முன்மொழிய, திரு சகதீசன் வழிமொழிய கூடியிருந்த அனைவரின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பண்டிதரே கூறுகிறார்!

மெர்க்காரா, செப். 26—

'சுதந்தரம் என்றால் அரசியல் ரீதியிலும், மனப்பான்மையின் ரீதியிலும், அதிக நலன்கள் ஏற்படுவதுதான்'

என்று, பண்டித நேரு இங்கு நடைபெற்றக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

என். எஸ். கே. சொற்பயிற்சி மன்றத் துவக்க விழாவும், கே. வி. கே. சாமி நினைவு நாளும்

29—9—57 மாலை 6 மணிக்கு, சேலம் அம்மாப்பேட்டை இராஜகணபதி தெருவில் தோழர் சி. ஏ. சிந்தையன் தலைமையில் மேற்படி விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் வி. சிவப்பிரகாசம் மன்றத்தைத் துவக்கி வைப்பார். தோழர்கள் கா. அப்பாதுரை, கே. எஸ். மணி, சிற்றுளி சுப்பிரமணியம், ஈ. ஆர். கிருஷ்ணன் மற்றும் பலர் பேசுவர்.

இராமவர்மம்புதூர் தமிழர் படிப்பகத் துவக்க விழா

29—9—57 இரவு 7 மணிக்கு, இராமவர்மம்புதூரில் (திருகொச்சி) மேற்படி விழா நடைபெறும். தோழர் தங்கமாணிக்கம் மற்றும் பலர் பேசுவர்.

மதுரையில்

திராவிட நாடு விடுதலை வார விழா நிகழ்ச்சிகள்

தோழர் ஈ. வெ. கி. சம்பத் கலந்துகொள்கிறார்

29—9—57 காலை 9 மணியளவில், நகரின் முக்கிய வீதிகளில் கொடியேற்றப்படும். மாலை 4 மணிக்கு பெரிய விளக்குத் தூணிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு, 4 மாசி வீதிகள் வழியாகச் சென்று இராமநாதபுரம் சாலை கீழவெளி வீதி வழியாக வைகையாறு ஜின்னு மைதானத்தை யடையும்.

அங்கு நடைபெறும் பொதுக் கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் கலந்துகொள்கிறார்.

காலையில் மதுரை புகைவண்டி நிலயத்தில் தோழர் சம்பத் அவர்கட்கு ஒரு மாபெரும் வரவேற்பு அளிக்கப்படும்.

சேலம் —வேலூருக்கு ஈ. வெ. கி. சம்பத் வருகை

ஊராட்சி மன்ற வரவேற்பு

28—9—57 மாலை 5-மணிக்கு, வேலூர் (சேலம்) ஊராட்சி மன்றச் சார்பில், தோழர் ஈ. வெ. கி. சம்பந் எம். பி. அவர்கட்கு வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

சென்னை மாவட்ட தி. மு. க. உறுப்பினர்கட்கு:

"29—9—57 ஞாயிறு மாலை 4-மணிக்கு இராயபுரம் 'அறிவக'த்தில் நடைபெறவிருக்கும் மாவட்டக் கூட்டத்தில் துணைச் செயலாளரால் கொண்டுவரப்படும் பிரச்சினைகள்குறித்து ஆலோசித்துமுடிவு செய்யவேண்டி இருப்பதால் உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகைதர வேண்டுகிறேன்"

என்று, சென்னை மாவட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் கோ. செங்குட்டுவன் அறிவிக்கிறார்.

சென்னை, சிந்தனையாளர் கழகக் கூட்டம்

28—9—57 மாலை 6 மணிக்கு, சென்னை-6, சிந்தனையாளர் சழகத்தில், தோழர் சௌந்திரராசன் தலைமையில் தோழர் முரசொலி சொர்ணம் "இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமா?" என்னும் பொருளபற்றிப் பேசுவார்.

சென்னை நுங்கம்பாக்கம் கழகத் தோழர்கள்மீது வழக்கு

சென்னை, நுங்கம்பாக்கம் தி. மு. கழகத் தோழர் தி. சு. கிள்ளிவளவன் மற்றும் இருவர்மீது தொடரப்பட்டுள்ள வழக்கு விசாரணை முடிந்து, சென்னை எழும்பூர் பிரதம மாகாண மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நாளை (28—9—57) முற்பகல் தீர்ப்பு வழங்கப்படவிருக்கிறது.

கோவையில் கே. வி. கே. சாமி நினைவு நாள்

29—9—57 மாலை 6 மணிக்கு, கோவை (27-வது வட்டம்) முத்தமிழ் மன்றச் சார்பில் கே. வி. கே. சாமி நினைவு நாள் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர் க. ஆறுமுகம் தலைமை வகிப்பார். தோழர் கி. மனோகரன் சொற்பொழிவாற்றுவார்.

நக்கீரர்பட்டி மன்றம்

28-9-57 மாலை 6-30 மணிக்கு, சென்னை—பெத்துநாய்க்கன் பேட்டை முருகேசமுதலித் தெரு மணவழகா மன்றத்தில் திரு. மயிலை சிவமுத்து தலைமையில் நக்கீரர்பட்டி மன்றக் கூட்டம் நடைபெறும். தோழர் வெ. கபிலன் "இலக்கிய இன்பம்" குறித்துப் பேசுவார்.

கழகக் கூட்டங்கள்

★

சாத்தூர்:

வடக்கு ரத வீதி
(அண்ணா திடலில்)
29—9—57 இரவு 7 மணிக்கு
தலைவர்:
சி. டபிள்யூ. பொன்னையா
பேசுவோர்:
கே. ஆர். பி. மணிமொழியன்
எஸ். ஏ. குருசாமி
இரா. இராமச்சந்திரன்
இரா. சந்திரதாசன்
வி. இளஞ்சேரன்

★

திண்டுக்கல்:

நாகல்நகர் சந்தைத் திடலில்
29—9—57 இரவு 7 மணிக்கு
தலைவர்: அ. தங்கவேலர்
பேசுவோர்:
என். எஸ். இளங்கோ
என். முத்து
ஏ. சப்பையா

★

கோவை:

காந்திபுரம் 100 அடி ரோடில்
29—9—57 இரவு 7 மணிக்கு
பேசுவோர்:
டி. கே. சீனிவாசன்
தாரை பெரியசாமி

★

பண்ருட்டி:

தண்டபாணி டாக்கீஸ் திடலில்
29—9—57 இரவு 7 மணிக்கு
தலைவர்: ந. இராசகோபால்
பேசுவோர்:
என். வி. நடராசன்
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
எம். செல்வராஜ் எம்.எல்.ஏ.
ஆனந்தன் எம்.எல்.ஏ.
நடராசன் எம்.எல்.ஏ.
தில்லை-வில்லாளன்

★

மதுரை:

வைகையாற்று ஜின்னு திடலில்
திராவிடநாடு விடுதலை வார விழா
29—9—57 இரவு 7 மணிக்கு
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.
வே. கிருஷ்ணமூர்த்தி
எஸ். முத்து
கே. எஸ். சந்தானம்

★

கோளத்தூர்:

போஜன் அரிசி மில் அருகில்
(கே. வி. கே. சாமி நினைவு நாள் பொதுக்கூட்டம்)
29—9—57 மாலை 6-30 மணிக்கு
தலைவர்: கே. ஆர். பேத்தண்ணன்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
க. கு. சின்னுசாமி

★

வேலூர்—(சேலம்):

வ. உ. சி. திடலில்
28—9—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: வி. ஏ. இராமநாதன்
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
வி. காளியப்பன்
சிற்றுளி-சுப்பிரமணியம்
டி. வி. சுந்தரராசன்

★

பண்டாரக்கோட்டை:

என். எஸ். கே. திடலில்
திராவிட நாடு விடுதலைவார விழா
28—9—57 மாலை 5½ மணிக்கு
தலைவர்: பா. சுப்பிரமணியம்
பேசுவோர்:
இரே. இளம்வழுதி
எம். வேலு
கே. ஆர். சபாபதி
ஜே. தருமாஞ்சலு

★

திருத்துறைப்பூண்டி:

28—9—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: கணேசன்
பேசுபவர்: என். வி. நடராசன்

க. அன்பழகன்

எம்.ஏ., எம்.எல்.ஏ. சுற்றுப்பயணம்

செப். 28: லால்குடி
29: முசிறி
(பஞ்சாயத்து மாநாடு)
30: காட்டுபுத்தூர்

அருணகிரி அடிகள் தலைமை உரை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

"பின்னர் என்னைக் கைது செய்தார்கள். சத்தியாக்கிரகத்தைத் தூண்டியதாக எனக்கு, 117-வது, செக்ஷன்படி குற்றஞ் சாட்டப்பட்டு, 2 ஆண்டுக் கடுங்காவல் சிறைத்தண்டனை கொடுத்தார்கள். சிறையில் 'சி' வகுப்புதான் கொடுத்தார்கள். களிதான் சாப்பிட வேண்டும் என்றார்கள். வழக்கறிஞர் இரங்கராமானுசம் அவர்கள் எனக்காக வாதாடினர். சிறையில் எனக்கு உயர் வகுப்புத்தர வேண்டுமென்று அவர் வாதாடியும், மாதவராவ் எனும் நீதிபதி மறுத்துவிட்டார். வேலூர் சிறையில் வைக்கப்பட்டேன்.

"இவ்வாறாக நாங்கள் அந்தக் காலத்தில் இந்தியை எதிர்த்துப் போராடினோம்.

"இந்தி மொழி இந்தியாவுக்குப் பொது மொழியாவதற்குத் தகுதியான மொழியா?—என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும். ஒரு சிறு தகுதிகூட கிடையாது. இந்தி மொழி 500 ஆண்டுகளுக்கு முன்னாலேதான் வந்தது. இதிலேயும் 11 பிரிவுகள் இருக்கின்றன. இந்த 11 பிரிவிலேயும் 3 வகைகளாகப் பிரித்திருக்கிறார்கள்; மேல்நாட்டு இந்தி—கீழ்நாட்டு இந்தி—பீஹாரி இந்தி என்று. அந்த 3 வகையில் ஒருவகை இந்தி மைதிலீ என்ற ஒரு இந்தி. அந்த இந்தியிலேதான் துளசிதாசர் இராமாயணம் செய்யப்பட்டது. அந்தஇந்திதான் இப்பொழுதுவருகின்றது. முதல் சொன்ன 3 வகை இந்தியிருக்கின்றதே, அதில் ஒரு இந்தியில் பேசினால் இன்னொருவன் புரிந்துகொள்ளமாட்டான்; வடநாட்டில் இன்றைக்கும் பார்க்கலாம். அந்த நிலையிலே இருக்கின்றது. 'மார்க்கெட் பாஷை' என்று சொல்லுகின்றார்களே, அந்த மொழி இந்த இந்தி; இதற்குச் சொந்த எழுத்து கிடையாது; சவமொழிச் சொல்லையும், பிராகிருத மொழிச் சொற்களையும் வைத்துப் பிழைப்பதுதான்; வேறு ஒன்றும் கிடையாது. வளம் சிறிதுமில்லை; அத்தகைய இந்தியை இங்கு கொண்டுவந்து வைக்கவேண்டும் — இந்தியாவின் மொழியாக்கவேண்டும்என்பதற்கு என்ன காரணம் என்று கேட்டால், 'இந்தியாவினுடைய ஒற்றுமைக்காக வேண்டியும், அவர்களுடைய நாட்டுக்காக வேண்டியும் புகுத்துகின்றோம்' என்று போலித்தன்மையைக் காட்டுகின்றார்கள். ஆனால் இந்தியாவிலே தகுதிவேண்டாமா அதற்கு?

"மொழியினுடைய அழகிலே தமிழுக்கு நிகரான ஒரு மொழி கிடையாது அன்பர்களே! எப்படி? மொழியை அமைத்திருக்கின்றார்களே உயிரென்றும், மெய்யென்றும், உயிர்மெய்யென்றும், இப்படிப் பாகுபடுத்தி, உயிர்மெய்யில் ஏறி உயிர் மெய்யாக ஆகிறது என்ற முறைபாடு எந்த மொழிக்கும் இல்லை.

"இந்த இந்திக்கு என்ன இருக்கிறது? எழுத்தும் கிடையாது—இலக்கணமும் கிடையாது. இதனுடைய தாயாக இருக்கிறதே 'சவமொழி' அதற்கும் எழுத்தே கிடையாது; இது பொய்யல்ல, ஏனென்றால், அதற்குச் சுருதி என்று பெயர்; சுருதி என்றால் காதாலே கேட்பது என்று அர்த்தம். அந்த மொழிக்கு, பிறகு வந்த தேவநாகரி என்ற எழுத்தை கொண்டுவந்தார்களே தவிர அதற்கென்று எழுத்து கிடையாது.

"ஆனால் நம்முடைய தமிழுக்கு ஆதியிலேயிருந்து இதுவரையில் ஒலி வடிவும்—வரி வடிவும் ஆகிகலை வடிவாகத் திகழ்ந்துகொண்டிருக்கக்கூடிய நிலை இன்றும் மாறியதே கிடையாது.

"'செத்த ஆரியத்தை உயிர்த்து மீட்பித்து உலகை ஆள எண்ணுதல் என்ன மடமை' என்று கேட்டேன்.

"சின்னஞ்சிறுவரைக் கோலை பண்ண இந்தியைப் புகுத்துதல் என்ன மடமை?

"அன்னை மொழியோடு மற்றும் ஆங்கிலப் பாடையும் கற்று, ஊன்னலடையும் சிறுவருக்கு இன்னும் இந்தியை சுமத்தல் என்ன மடமை?

"கண்ணை மூடிப் பால்குடித்தால் உலகம் தெரியாதென்று எண்ணும் வஞ்சப் பூனைபோல் மைக்கண்ணடி போட்டு ஏமாற்றுதல் என்ன மடமை!

"உண்ணும் விடப் பாம்பு உலகில் நல்ல பாம்பு என்றாலும் சீறின் கல்லினைக் கொண்டடியாரோ பல்லினைப் பிடிங்கிடாரோ என்ன மடமை? என்று அன்று கேட்ட அந்த அருணகிரிநாதன்தான் இன்றும் இருக்கிறேன்."

திராவிட நாடு விடுதலை வாரக் கூட்டங்கள்

★

சென்னை:

28—9—57 மாலை 6-30 மணிக்கு, சென்னை 2-வது வட்ட தி. மு. க. கிளையின் சார்பில், கழக அலுவலகத்தில் திராவிட நாடு விடுதலை வார விழா கொண்டாடப்பெறும். தோழர் ஆர். எஸ். பாண்டியன் தலைமை வகிப்பார்; தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

28-9-57 மாலை 6-30 மணிக்கு, சென்னை, பெத்துநாய்க்கன் பேட்டை மக்கள்மன்றப் பணிமனையில் (17, திருப்பள்ளித் தெரு) தோழர் சு. சந்திரசேகரன் தலைமையில் திராவிடநாடு விடுதலை வாரம் கொண்டாடப்படும். தோழர்கள் சி. எஸ். கணேசன், அ. நு. சக்கரபாணி, தோ. லோ. கந்தசாமி ஆகியோர் பேசுவர்.

காஞ்சீபுரம்:

29—9—57 காலை 9-மணிக்கு திராவிட நாடு விடுதலை வாரம்—கே. வி. கே. சாமி நினைவு வாரத்தை யொட்டி பெரியகாஞ்சிபுரம் ஒலிமுகம்மதுபேட்டையிலிருந்து தோழர் டி. சபாபதி தலைமையில் ஒரு மாபெரும் சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு, நகரின் முக்கிய வீதிகளின் வழியே வரும். ஆங்காங்கே கொடியேற்றுவிழாக்களும் நடைபெறும்.

மாலை 6-மணிக்கு சின்ன காஞ்சிபுரம் ஆலடி பிள்ளையார் கோயில் தெருவில் தோழர் டி. சபாபதி தலைமையில் அண்ணா அவர்கள் நாகம்மையார் படிப்பகத்தை (தி. மு. க. கிளை) திறந்து வைப்பார். தோழர்கள சி. வி. எம். அண்ணாமலை, இராம. அரங்கண்ணல், டி. சீனிவாசன், இரா. வெங்கடேசன் ஆகியோர் பேசுவர்.

சென்னை ஆயிரம்விளக்கு தொகுதி தி. மு. க. செயலாளர்களுக்கு:

29—9—57 காலை 8 மணிக்கு 'தனியரசு' அலுவலகத்தில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். அதுபோது, 22, 33, 34, 37, 38 ஆகிய வட்ட தி. மு. கழகச் செயலாளர்கள், பொருளாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள் அனைவரும் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.